பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 06 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான Seychelles நாட்டின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான ஊரக உள்ளூர் தணிக்கை இணையதள சேவையை மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று தொடங்கி வைத்தார்.

3. தேர்தல் பணிகளை செம்மையாக நிறைவேற்றுவதில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தலைமை தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

4. பிரான்ஸில் நேரிட்ட விமான விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. ஆசிய கோப்பை வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தது.

>>>>><<<<<

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, சிறந்த நிர்வாகத்தை வழங்க இயலும் என்று இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு உணர்த்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக Seychelles சென்றுள்ள பிரதமர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

அரசின் திட்டங்களை மக்களுக்கு எளிதாக கொண்டு சேர்ப்பதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவும், Seychelles-ம் வளர்ச்சியை மட்டுமே தாரகமந்திரமாக கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை இருநாடுகளும் வலியுறுத்துவதாக அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இதற்கிடையே, சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக பிரதமர் ஆற்றிவரும் பணிகளுக்காக Seychelles நாட்டின் உயரிய விருதினை அந்நாட்டு அதிபர் திரு. Patric Herminie, திரு. நரேந்திர மோடிக்கு வழங்கினார்.

இந்த விருது, தமக்கு மட்டுமின்றி 140 கோடி இந்தியர்களுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்தார்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக அயராது பாடுபட்டு வரும் அனைத்து நாடுகளுக்கும் இந்த விருதினை அர்ப்பணிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, இந்தியா - Seychelles இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்த பேச்சுகளுக்குப் பின்னர், இருநாடுகளுக்கு இடையே வர்த்தகம், டிஜிட்டல் தொழில்நுட்பம், வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

>>>>><<<<<

செசல்ஸ் நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, மத்திய அமைச்சர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதையே இது உணர்த்துவதாகவும், பிரதமரின் தலைமைத்துவமே இதற்கு காரணம் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக வழங்கப்படும் இந்த உயரிய விருது, திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டிருப்பது, நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ் கோயல், திரு. மனோகர் லால், திரு. ஜிதேந்திர சிங் உட்பட பலரும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான ஊரக உள்ளூர் தணிக்கை இணையதள சேவையை மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

ஊரக வளரச்சித் துறையின் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை இந்த இணையதள சேவை உறுதி செய்யும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தணிக்கை செயல்பாடுகளை நவீனமயமாக்கும் நோக்கில், இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் தணிக்கை தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாக இந்த இணையதளம் இயங்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

*Totapuri* மாம்பழ விவசாயிகளுக்கு உரிய நிதியுதவியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானுக்கு எழுதியுள்ள கடித்தத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மாம்பழ விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, அதற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் 281 கோடி ரூபாயை விடுவிக்க வேண்டும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தில்லியில் தூய்மையை பராமரிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சருடன் தில்லி தூய்மைப் பணிகள் இயக்கத்தின் கீழ், இன்று பொதுமக்களுடன் இணைந்து தூய்மைப் பணிகளை மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்த இயக்கத்தில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மக்கள் இயக்கமாக இது உருவெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

யமுனை ஆற்றில், பொதுமக்கள் குப்பைகள் கொட்டுவதை தவிர்க்க வேண்டும் என்றும் திருமதி. ரேகா குப்தா வலியுறுத்தினார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் போலியோ சொட்டு மருந்து முகாம் இன்று நடைபெற்றது.

இதில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

>>>>><<<<<

தேர்தல் பணிகளை செம்மையாக நிறைவேற்றுவதில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறியுள்ளார்.

ஜம்மு கஷ்மீரின் Budgam மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து தாம் இவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் திரு. Gyanesh Kumar கூறினார்.

>>>>><<<<<

போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சுகாதாரத்துறை அதிகாரிகள், சட்ட அமலாக்கத்துறையினர் மற்றும் அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால், போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு, தனிநபரிடமிருந்து தொடங்கி, கல்வி நிறுவனங்கள், நகரங்கள் என்ற அடிப்படையில் நாடுமுழுவதும் சென்றடைய வேண்டும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் குடிமைப்பணி அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா வலியுறுத்தியுள்ளார்.

குடிமைப்பணி தேர்வில் வெற்றிபெற்ற ராஜஸ்தானைச் சேர்ந்தவர்களுடன் இன்று ஜெய்ப்பூரில் அவர் கலந்துரையாடினார்.

கடின உழைப்புடன்நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்று திரு. பஜன்லால் சர்மா கூறினார்.

>>>>><<<<<

ஜார்க்கண்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நாளை மறுநாள் தொடங்கவுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. ரவிக்குமார் கூறியுள்ளார்.

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அடுத்த மாதம் 29ஆம் தேதிவரை இப்பணிகள் நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*தீவிரவாதத்தை கட்டப்படுத்த பாகிஸ்தான் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.*

*வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.*

*அரசு கொள்கையாக தீவிரவாதத்தை பாகிஸ்தான் பின்பற்றி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.*

*கராச்சியில் அண்மையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல சம்பவங்கள் தொடர்பாக பிற நாடுகளை பாகிஸ்தான் குற்றம் சாட்டுவது ஏற்புடையதல்ல என்றும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*பிரான்ஸில் நேரிட்ட விமான விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*Tomblaine-ல் பாராசூட் பயிற்சி நிறுவனத்திற்கு சொந்தமான இந்த விமானம், 5 மாணவர்கள் மற்றும் 5 பயிற்சியாளர்களுடன் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.*

*இந்த விபத்தில் விமானியும் உயிரிழந்ததாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*சவுதி அரேபியாவில் நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*எண்ணெய் நிறுவனத்திற்கு சொந்தமான இந்த ஹெலிகாப்டர், Ras Tanura அருகே விபத்துக்குள்ளானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.*

*>>>>><<<<<*

*கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.*

*இடுக்கி, எர்ணாகுளம், கோழிக்கோடு, வயநாடு, கன்னூர் மற்றும் காஸர்கோடு மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*அம்மாநிலத்தின் 8 மாவட்டங்களில் கனமழக்கு வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தது.*

*அஹமதாபாதில் நடைபெற்ற இப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 25-23, 23-25, 25-21, 25-17 என்ற செட்கணக்கில் பஹ்ரைனை வென்றது.*

*>>>>><<<<<*

*உலகக்கோப்பை மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.*

*லார்ட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.*

*>>>>><<<<<*

*இந்தியா - அயர்லாந்து இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி,Belfast-ல் நடைபெற்று வருகிறது.*

*இதில் முதலில் பேட் செய்து வரும் அயர்லாந்து அணி சற்றுமுன்வரை 14 புள்ளி 2 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 112 ரன் எடுத்துள்ளது.*

*>>>>><<<<<*

*Galle-யில் நடைபெற்ற இந்தியா-ஏ - இலங்கை -ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.*

*>>>>><<<<<*

*இங்கிலாந்து "ஏ" - இந்தியா "ஏ" இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று Hove-ல் நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று லண்டனில் நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*துருக்கியில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rethin Pranav Senthilkumar பட்டம் வென்றார்.*

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் *6-3, 7-5* என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் *Keshav Chopra*-வை வென்றார்.

*>>>>>END<<<<<*